Singapore Examinations and Assessment Board

Singapore–Cambridge General Certificate of Education
Advanced Level (2025)

# Higher 1 Tamil Language
# உயர்தரம் 1 தமிழ்மொழி
# (Syllabus 8657)

© MOE 2025

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பாடத்திட்ட நோக்கங்கள் | 3 |
| மதிப்பீட்டு நோக்கங்கள் | 4 |
| தேர்வு அமைப்புமுறை | 5 |
| தேர்வு விவர அட்டவணை | 7 |
| தேர்வுக்குரிய மரபுத்தொடர்கள் மற்றும் இணைமொழிகள் பட்டியல் | 8 |
| கட்டுரை மதிப்பீட்டுத் திட்டம் | 9 |
| வாய்மொழி மதிப்பீட்டுத் திட்டம் | 11 |

## பாடத்திட்ட நோக்கங்கள்

கல்வி அமைச்சின் பாடக்கலைத்திட்ட வரைவு மேம்பாட்டுப் பிரிவினால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகப் புகுமுகநிலைக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களோடு 21-ஆம் நூற்றாண்டிற்குத் தேவையான முக்கியத் திறன்களாகிய இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களையும் மாணவர்களிடம் வளர்த்தலாகும். எனவே, பல்கலைக்கழகப் புகுமுகநிலைக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம் பின்வரும் கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது:

**கேட்டல்**

- பொதுவான தலைப்புகளில் அமைந்த அன்றாடக் கலந்துரையாடல்கள், அறிவிப்புகள், விளம்பரங்கள், ஊடகப் படைப்புகள், உரையாடல்கள் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள கருத்துகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்

**பேசுதல்**

- ஒரு நிகழ்வைத் தெளிவாகவும் பொருத்தமான சொல்வளத்தோடும் சரளமாகவும் ஏற்ற தொனியோடும் விவரித்தல்
- ஒரு சம்பவத்தில் நிகழ்ந்தவற்றைத் தெளிவாகவும் பொருத்தமான சொல்வளத்தோடும் ஏற்ற தொனியோடும் விவரித்தல்
- பொதுவான தலைப்பில் எடுத்துக்காட்டுகளோடு கருத்துத் தெரிவித்தல்

**பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்**

- பொதுவான தலைப்புகளில் போதுமான அளவு சரளத்தோடு உரையாடுதல்
- கலந்துரையாடல்களில் மற்றவர்களுடன் கருத்துகளைப் பரிமாறிக்கொள்வதன்வழி உரையாடலைத் தொடர்தல்

**படித்தல்**

- செய்தித்தாள்கள், இதழ்கள், கதை நூல்கள், விளம்பரங்கள், கடிதங்கள், நாவல்கள், கட்டுரைகள் முதலிய பலதரப்பட்ட பனுவல் வகைகளைப் படித்துப் புரிந்துகொள்ளுதல்
- பொதுவான தலைப்புகளில் அமைந்த பனுவல்களின் கருத்துகளைப் படித்துப் புரிந்துகொண்டு விளக்குதல்

**எழுதுதல்**

- பொருத்தமான சொற்களையும் பலதரப்பட்ட வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தித் தம் அனுபவங்களையும் உணர்வுகளையும் சுய கருத்துகளையும் விளக்கிக் கட்டுரை எழுதுதல்

**எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்**

- மின்னஞ்சல், கடிதம், வலைப்பூ வாயிலாகத் தம் கருத்துகளையும் உணர்வுகளையும் எடுத்துக்காட்டுகளுடன் தெளிவான மொழிநடையில், பொருத்தமான சொற்களைப் பயன்படுத்திச் சரளமாகக் கருத்துப்பரிமாற்றம் செய்தல்

## மதிப்பீட்டு நோக்கங்கள்

பல்கலைக்கழகப் புகுமுகநிலையில் பயிலும் மாணவர்கள் கற்றல், கற்பித்தலின்வழிப் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் அடைவுநிலைகளை அடைவதற்குரிய திறன்களைப் பெற்றிருப்பர். இத்திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும். கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட மதிப்பீட்டு நோக்கங்கள் பின்வருமாறு:

**கேட்டல்**

- எழுத்து அல்லது பேச்சு வடிவில் அமைந்த பலவகையான பனுவல்களைக் கேட்டு அவற்றையொட்டிய புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்

**பேசுதல்**

- கொடுக்கப்படும் தலைப்புக்கு ஏற்ற முக்கியக் கருத்துகளைத் தர்க்கரீதியாகப் பொருத்தமான சான்றுகளுடன் தொடர்ச்சியாகவும் நிரல்படவும் எடுத்துரைத்தல்
- செவிமடுப்போர் புரிந்துகொள்ளுமாறு கருத்துகளைத் தெளிவாகவும் சரளமாகவும் கூறுதல்; பொருத்தமான சொல்வளமும் தொடரமைப்பும் கொண்ட மொழிநடையைப் பயன்படுத்துதல்; பேச்சுத்தமிழிலோ எழுத்துத்தமிழிலோ சரியான உச்சரிப்புடனும் பொருத்தமான தொனியுடனும் பேசுதல்

**பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்**

- கொடுக்கப்படும் தலைப்பையொட்டி ஈடுபாட்டுடன் உரையாடுவதோடு தம் சொந்தக் கருத்துகளைத் தெளிவாகவும் சரளமாகவும் எடுத்துரைத்தல்
- கருத்துகளைத் தக்க சான்றுகளுடனும் தன்னம்பிக்கையுடனும் நியாயப்படுத்துதல்
- செவிமடுப்போர் புரிந்துகொள்ளுமாறு கருத்துகளைத் தெளிவாகவும் சரளமாகவும் கூறுதல்; பொருத்தமான சொல்வளமும் தொடரமைப்பும் கொண்ட மொழிநடையைப் பயன்படுத்துதல்; பேச்சுத்தமிழிலோ எழுத்துத்தமிழிலோ சரியான உச்சரிப்புடனும் பொருத்தமான தொனியுடனும் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுதல்

**படித்தல்**

- பலதரப்பட்ட பனுவல்களை ஆழ்ந்து படித்துத் தம் புரிந்துணர்வை வெளிப்படுத்தும் வகையில் வினாக்களுக்கு இலக்கணப் பிழைகளின்றி விடையளித்தல்
- பனுவல்களில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்களுக்கு இடம்நோக்கிப் பொருளறிந்து எழுதுதல்

**எழுதுதல்**

- கொடுக்கப்படும் கட்டுரைத் தலைப்புக்கு ஏற்ற கருத்துகளைத் தெளிவாகவும் விளக்கமாகவும் விரிவாகவும் பொருத்தமான எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்தியும் கருத்து வளர்ச்சியுடன் எழுதுதல்
- சிறந்த மொழிநடையில் பொருத்தமான, பலதரப்பட்ட சொல்வளத்தையும் வாக்கிய வகைகளையும் கருத்திணைப்புக் குறிகளையும் பயன்படுத்திக் கட்டுரையை நிரல்பட அமைந்த கருத்தமைப்போடு எழுதுதல்

## தேர்வு அமைப்புமுறை

உயர்தரம் 1 தமிழ்மொழித் தேர்வு மொத்தம் இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.

**வினாத்தாள் 1**

இத்தாள் **பகுதி 1**, **பகுதி 2** ஆகியவற்றை உள்ளடக்கியது.

**பகுதி 1: கட்டுரை**

**(1 மணி 30 நிமிடங்கள், 60 மதிப்பெண்கள், 30%)**

இப்பகுதியில் கொடுக்கப்படும் நான்கு தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப்பற்றி 300 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதவேண்டும். மூன்று கட்டுரைத் தலைப்புகளும் ஒரு கருத்து விளக்கப்படத் தலைப்பும் இப்பகுதியில் இடம்பெறும். கருத்து விளக்கப்படத் தலைப்புடன் 3 முதல் 4 நிழற்படங்கள் கொடுக்கப்படும். அந்நிழற்படங்களை அடிப்படையாகக்கொண்டு கொடுக்கப்பட்டுள்ள தலைப்பில் கட்டுரை எழுதவேண்டும். கட்டுரை எழுதுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட தமிழ் அகராதி ஒன்றினைப் பயன்படுத்தலாம். பொருள், மொழி, அமைப்புமுறை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தேர்வெழுதுவோரின் கட்டுரை மதிப்பிடப்படும்.

**பகுதி 2: கருத்தறிதல் மற்றும் மொழி மரபும் பயன்பாடும்**

**(1 மணி 30 நிமிடங்கள், 80 மதிப்பெண்கள், 40%)**

இப்பகுதியில் 'அ', 'ஆ', 'இ' ஆகிய பிரிவுகள் இருக்கும்.

### 'அ' பிரிவு (மொழி மரபும் பயன்பாடும்)

இப்பிரிவில் 'பிழை திருத்தம்', 'மரபுத்தொடர்களும் இணைமொழிகளும்' ஆகிய தலைப்புகளில் வினாக்கள் இடம்பெறும். 'பிழை திருத்தம்' எனும் தலைப்பின்கீழ், பாடத்திட்டத்திலுள்ள இலக்கணக் கூறுகளைச் சோதிக்கும் வகையில் ஐந்து வினாக்கள் இடம்பெறும். கொடுக்கப்பட்டுள்ள பகுதியிலிருந்து ஐந்து பிழையான சொற்களைக் கண்டறிந்து அவற்றைத் திருத்திச் சரியான வடிவத்தை எழுதவேண்டும். 'மரபுத்தொடர்களும் இணைமொழிகளும்' எனும் தலைப்பின்கீழ் ஐந்து வினாக்கள் இடம்பெறும். அவை பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள 30 மரபுத்தொடர்களையும் 20 இணைமொழிகளையும் அடிப்படையாகக்கொண்டு அமைந்திருக்கும். கொடுக்கப்படும் பத்து உதவிச்சொற்களிலிருந்து கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான மரபுத்தொடர்களையும் இணைமொழிகளையும் தேர்ந்தெடுத்து எழுதவேண்டும்.

### 'ஆ' பிரிவு (முன்னுணர்வுக் கருத்தறிதல்)

இப்பிரிவில் ஓர் உரைநடைப் பகுதியை அடிப்படையாகக்கொண்டு பத்துக் கோடிட்ட இடங்கள் இடம்பெறும். கொடுக்கப்படும் பதினைந்து உதவிச்சொற்களிலிருந்து மிகப் பொருத்தமான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதவேண்டும்.

### 'இ' பிரிவு (சுயவிடைக் கருத்தறிதல்)

இப்பிரிவில் ஓர் உரைநடைப் பகுதியையொட்டி ஐந்து சுயவிடை வினாக்கள் கேட்கப்படும். அவற்றுள் ஒரு வினா சுருக்கி வரையும் வகையிலும் மற்றொரு வினா சொற்பொருளை அடிப்படையாகக்கொண்டும் அமையும். இவ்வினாக்களுக்கான விடைகளைப் பகுதியின் துணைகொண்டு கண்டறிந்து சொந்த நடையில் எழுதவேண்டும்.

**வினாத்தாள் 2**

இவ்வினாத்தாள் வாய்மொழித் தேர்வு, கேட்டல் கருத்தறிதல் தேர்வு ஆகியவற்றை உள்ளடக்கியது.

**வாய்மொழித் தேர்வு**
**(10-15 நிமிடங்கள், 50 மதிப்பெண்கள், 25%)**

இத்தேர்வு பின்வரும் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியது:

- வாய்மொழிப் படைப்பு
- வாய்மொழிப் படைப்பையொட்டிய கருத்துரையாடல்

**வாய்மொழிப் படைப்பு (20 மதிப்பெண்கள்)**

பேச்சுத் திறனைச் சோதிக்கும் நோக்கத்தோடு வாய்மொழிப் படைப்பு எனும் பகுதி தேர்வில் இடம்பெறுகிறது. தேர்வுக்கு அமர்பவர் ஒளிக்காட்சியைப் பார்ப்பதற்கும் தலைப்பையொட்டி 2 நிமிடங்களுக்கு மிகாத படைப்பைத் தயார் செய்துகொள்வதற்கும் 10 நிமிடங்கள் வழங்கப்படும். தேர்வுக்கு அமர்பவர் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பைப் படித்துவிட்டு அதனையொட்டி அமைந்த ஓர் ஒளிக்காட்சி ஊக்கக்கூறைப் (55 – 60 வினாடிகள்) பார்க்கவேண்டும். ஒளிக்காட்சியின் குவிநோக்கத்தையும் சூழமைவையும் உணர்த்தும் வகையில் நான்கு அல்லது ஐந்து வாக்கியங்களில் ஒளிக்காட்சி வருணனை அமைந்திருக்கும். தேர்வுக்கு அமர்பவர் கொடுக்கப்பட்ட தலைப்பையொட்டி 2 நிமிடங்களுக்கு மிகாமல் ஒரு படைப்பைப் படைக்கவேண்டும். கருத்து (கருத்துப் பொருத்தம், கருத்து வளர்ச்சி மற்றும் கருத்து அமைப்பு), மொழிப் பயன்பாடு (சரளம், சொல்வளம் மற்றும் தெளிவான பேச்சு) ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வுக்கு அமர்பவரின் படைப்பு மதிப்பிடப்படும்.

**வாய்மொழிப் படைப்பையொட்டிய கருத்துரையாடல் (30 மதிப்பெண்கள்)**

பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்திறனைச் சோதிக்கும் நோக்கத்தோடு வாய்மொழிப் படைப்பை ஒட்டிய கருத்துரையாடல் எனும் பகுதி தேர்வில் இடம்பெறுகிறது. தேர்வுக்கு அமர்பவர் தாம் படைத்த படைப்பையொட்டித் தேர்வாளரோடு கருத்துரையாடலில் ஈடுபடவேண்டும். எனவே, கருத்துரையாடல் தொடர்ச்சியாக நடைபெறுவதற்கு ஏதுவாக வாய்மொழித் தேர்வாளர் தூண்டுதல் வினாக்களைக் கேட்டு உரையாடலை வழிநடத்திச் செல்லவேண்டும். தேர்வுக்கு அமர்பவரிடம் கேட்கப்படும் வினாக்கள் வாய்மொழிப் படைப்பை அடிப்படையாகக்கொண்டும் கருத்துரையாடலின்போது தேர்வுக்கு அமர்பவர் கூறும் கருத்துகளை அடிப்படையாகக்கொண்டும் அமையவேண்டும். இவ்வினாக்கள் விளக்கம் கேட்கும் வினாக்களாகவும் கருத்துகளை நியாயப்படுத்தும் வினாக்களாகவும் அமையவேண்டும். கருத்துரையாடலில் ஈடுபாடு, கருத்துத் தெளிவு, கருத்துகளை நியாயப்படுத்துதல், மொழிப் பயன்பாடு ஆகிவற்றின் அடிப்படையில் தேர்வுக்கு அமர்பவரின் கருத்துரையாடல் மதிப்பிடப்படும்.

**கேட்டல் கருத்தறிதல் தேர்வு**
**(ஏறத்தாழ 30 நிமிடங்கள், 10 மதிப்பெண்கள், 5%)**

செய்தி, உரையாடல், சிற்றுரை, கதை, அறிக்கை, விளம்பரம், அறிவிப்பு முதலான தலைப்புகளில் இரண்டு குறும்பனுவல்களும் மூன்று நெடும்பனுவல்களும் இடம்பெறும். அவற்றையொட்டிப் பத்துத் தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒரு தேர்வில் இத்தலைப்புகள் அனைத்தும் இடம்பெறவேண்டும் என்ற அவசியமில்லை.

## தேர்வு விவர அட்டவணை

# சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் மேனிலை உயர்தரம் 1 தமிழ்மொழி (8657)

| தாள் | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | (மதிப்பளவு) மதிப்பெண் |
|---|---|---|---|---|
| **1**<br>(3 மணி)<br><br>**பகுதி 1:**<br>1 மணி 30 நிமிடங்கள்<br><br>**பகுதி 2:**<br>1 மணி 30 நிமிடங்கள் | **<u>தாள் 1 பகுதி 1: கட்டுரை</u>**<br><br>[**300** சொற்களுக்குக் குறையாமல்]<br>வகைகள்: நிகழ்வு, விளக்கம், விவாதம், கருத்து விளக்கப்படம் | கட்டுரை | 4<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | **(30%)**<br>60 |
| | **<u>தாள் 1 பகுதி 2: கருத்தறிதல் மற்றும் மொழி மரபும் பயன்பாடும்</u>**<br><br>**<u>'அ' பிரிவு</u>**<br>A1 பிழை திருத்தம் | பிழைகளைத் திருத்தி எழுதுதல் | 5 | **(40%)**<br>80<br><br>10 |
| | A2 மரபுத்தொடர்களும் இணைமொழிகளும் | கோடிட்ட இடங்களை நிறைவு செய்தல் | 5 | 10 |
| | **<u>'ஆ' பிரிவு</u>**<br>B3 முன்னுணர்வுக் கருத்தறிதல் | கோடிட்ட இடங்களை நிறைவு செய்தல் | 10 | 20 |
| | **<u>'இ' பிரிவு</u>**<br>C4 சுயவிடைக் கருத்தறிதல் (சுருக்கி வரைதல், சொற்பொருள் வினாக்கள் உட்பட) | சுயவிடை வினாக்கள் | 5 | 40 |
| **2**<br>(10 -15 நிமிடங்கள்)<br><br>(ஏறத்தாழ 30 நிமிடங்கள்) | **<u>வாய்மொழி</u>**<br>• வாய்மொழிப் படைப்பு<br>• வாய்மொழிப் படைப்பையொட்டிய கருத்துரையாடல் | சுயவிடை | <br><br>1<br>1 | **(30%)**<br>60<br>20<br>30 |
| | **<u>கேட்டல் கருத்தறிதல்</u>**<br>• 5 பனுவல்கள் | தெரிவுவிடை வினாக்கள் | 10 | 10 |

# சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் மேனிலை உயர்தரம் 1 தமிழ்மொழி (8657)

## தேர்வுக்குரிய மரபுத்தொடர்கள் மற்றும் இணைமொழிகள் பட்டியல்

| | மரபுத்தொடர்கள் | | இணைமொழிகள் |
|---|---|---|---|
| 1. | அகலக்கால் வைத்தல் | 1. | அகமும் முகமும் |
| 2. | அரைமனது | 2. | அகலாமல் அணுகாமல் |
| 3. | அலைக்கழித்தல் | 3. | உண்டியும் உடையும் |
| 4. | ஆட்டங்காணுதல் | 4. | ஆக்கமும் ஊக்கமும் |
| 5. | கண்ணாயிருத்தல் | 5. | ஆட்டமும் பாட்டமும் |
| 6. | கண்ணை உறுத்துதல் | 6. | ஆய்ந்து ஓய்ந்து |
| 7. | கண்ணைக் கசக்குதல் | 7. | ஒப்பாரும் மிக்காரும் |
| 8. | கரைபுரளுதல் | 8. | குறையும் நிறையும் |
| 9. | காதில் வாங்குதல் | 9. | குற்றம் குறை |
| 10. | காதில் பூச்சுற்றுதல் | 10. | கேட்பாரும் மேய்ப்பாரும் |
| 11. | காதோடு காதாக | 11. | சொல்லும் செயலும் |
| 12. | குரல்கொடுத்தல் | 12. | திட்டவட்டம் |
| 13. | கை ஓங்குதல் | 13. | நாடி தேடி |
| 14. | கைசுத்தம் | 14. | கண்டும் காணாமலும் |
| 15. | கைதூக்கிவிடுதல் | 15. | பட்டும் படாமலும் |
| 16. | கைநழுவி | 16. | பழியும் பாவமும் |
| 17. | காலை வாருதல் | 17. | மலைக்கும் மடுவுக்கும் |
| 18. | சொந்தக்காலில் நிற்றல் | 18. | மாலை மரியாதை |
| 19. | தலைவிரித்தாடுதல் | 19. | வாட்டி வதைத்து |
| 20. | தலைகாட்டுதல் | 20. | வாழ்விலும் தாழ்விலும் |
| 21. | தலைக்குனிவு | | |
| 22. | தலைசாய்த்தல் | | |
| 23. | தலைசுற்றுதல் | | |
| 24. | தலையில் வைத்துக் கொண்டாடுதல் | | |
| 25. | தலையில் கட்டுதல் | | |
| 26. | தாளம்போடுதல் | | |
| 27. | உருக்குலைதல் | | |
| 28. | கண்துடைப்பு | | |
| 29. | வாயடைத்துப்போதல் | | |
| 30. | வாய்ப்பூட்டுப் போடுதல் | | |

# கட்டுரை மதிப்பீட்டுத் திட்டம்

**பொருள் (30 மதிப்பெண்கள்)**

| நிலை / விளக்கம் | வகை 1<br><br>**24 - 30** | வகை 2 (மேனிலை)<br><br>**20 - 23** | வகை 2 (கீழ்நிலை)<br><br>**16 - 19** | வகை 3 (மேனிலை)<br><br>**12 - 15** | வகை 3 (கீழ்நிலை)<br><br>**8 - 11** | வகை 4<br><br>**0 - 7** |
|---|---|---|---|---|---|---|
| கருத்து வளம் | ▪ சிறந்த கருத்துகளும் பெரும்பாலும் விரிவான விளக்கமும் | ▪ பல நல்ல கருத்துகளும் பெரும்பாலும் விரிவான விளக்கமும் | ▪ போதுமான கருத்துகளும் ஓரளவு விரிவான விளக்கமும் | ▪ ஓரளவு போதுமான கருத்துகள் இருப்பினும் போதுமான கருத்து விளக்கம் இல்லாதிருத்தல் | ▪ குறைந்த அளவு கருத்துகளும் விளக்கமும் | ▪ மிகக் குறைந்த அளவு கருத்துகளும் தெளிவற்ற விளக்கமும் |
| கருத்துப் பொருத்தம் | ▪ முழுதும் பொருத்தமிக்கது<br><br>▪ கவரும் தன்மைமிக்கது; சுய படைப்புத் திறன்மிக்கது | ▪ பெரும்பாலும் முழுதும் பொருத்தமானது<br><br>▪ பெரும்பாலும் கவரும் தன்மையுடையது | ▪ பொருத்தமிக்கது<br><br>▪ ஏற்புடையதாயினும் அவ்வளவாக ஆர்வமூட்டாத கருத்துகளைக் கொண்டது | ▪ பொருத்தமிக்கது<br><br>▪ பெரும்பாலும் ஆர்வமூட்டாத கருத்துகளைக் கொண்டது | ▪ ஓரளவு பொருத்தமிக்கது<br><br>▪ ஆர்வமூட்டாத கருத்துகளைக் கொண்டது | ▪ முழுதும் பொருத்தம் இல்லாதது |
| கருத்து வளர்ச்சி | ▪ மிகத் தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ போதுமான அளவு கருத்து வளர்ச்சி | ▪ கூறியது கூறல்; சில இடங்களில் கருத்து வளர்ச்சி இல்லாதிருத்தல் | ▪ கூறியது கூறல் அதிகம் இடம்பெற்றிருத்தல்; கருத்து வளர்ச்சி இல்லாதிருத்தல் | ▪ தெளிவற்ற, முரண்பட்ட, குழப்பமான கருத்துகள் |

## மொழியும் அமைப்புமுறையும் (30 மதிப்பெண்கள்)

| நிலை / விளக்கம் | வகை 1<br>24 - 30 | வகை 2 (மேனிலை)<br>20 - 23 | வகை 2 (கீழ்நிலை)<br>16 - 19 | வகை 3 (மேனிலை)<br>12 - 15 | வகை 3 (கீழ்நிலை)<br>8 - 11 | வகை 4<br>1 - 7 |
|---|---|---|---|---|---|---|
| | ▪ மிகச் சிறந்த மொழித்திறன் | ▪ சிறந்த மொழித்திறன் | ▪ சராசரியான மொழித்திறன் | ▪ சராசரியான மொழித்திறன் | ▪ மொழித்திறன் சராசரி நிலைக்குக்கீழ் இருத்தல் | ▪ மொழித்திறன் மோசமாக இருத்தல் |
| இலக்கணம் | ▪ பெரும் பிழைகள் இன்மை, மிகச் சில இடறல்கள் அல்லது சிறு பிழைகள் | ▪ சில பெரும் பிழைகள், சில இடறல்கள் மற்றும் சிறு பிழைகள் | ▪ சில பெரும் பிழைகள், சில இடறல்கள் மற்றும் பல சிறு பிழைகள் | ▪ பல பெரும் பிழைகளும் சிறு பிழைகளும் | ▪ பல பெரும் பிழைகள்; பிழைகளைத் தவிர்க்கும் பொருட்டு எளிய மொழிக்கூறுகளைப் பயன்படுத்துதல் | ▪ படித்துப் புரிந்துகொள்ள இயலாத அளவிற்குப் பெரும் பிழைகள் மலிந்திருத்தல் |
| சொல்லாட்சியும் வாக்கிய அமைப்பும் | ▪ மிகப் பொருத்தமான, பலதரப்பட்ட சொல்வளம்<br>▪ மிகப் பொருத்தமான பலதரப்பட்ட வாக்கிய வகைகளும் கருத்திணைப்புக் குறிகளும் | ▪ பொருத்தமான, பலதரப்பட்ட சொல்வளம்<br>▪ பொருத்தமான பலதரப்பட்ட வாக்கிய வகைகளும் கருத்திணைப்புக் குறிகளும் | ▪ பொதுவாகப் பொருத்தமான சொல்வளம்<br>▪ பலதரப்பட்ட வாக்கிய வகைகள் | ▪ சொல்வளம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருப்பினும் கருத்துகளைப் புரிந்துகொள்வதில் இடர்ப்பாடு இல்லாதிருத்தல்<br>▪ எளிய வாக்கிய அமைப்புகள் | ▪ அடிப்படைச் சொற்களில் பிழைகள்; எளிய சொற்களையே மீண்டும் மீண்டும் பயன்படுத்துதல்<br>▪ ஒரே வகையான சிறு வாக்கியங்கள் | ▪ அடிப்படைச் சொற்களில் பிழைகள்; முறையற்ற சொல்வரிசை<br>▪ வாக்கிய அமைப்பில் சிதைவு |
| அமைப்புமுறை | ▪ மிகச் சிறந்த பத்தியமைப்பும் | ▪ சிறந்த பத்தியமைப்பு | ▪ பொருத்தமான பத்தியமைப்பு | ▪ ஓரளவு பொருத்தமான பத்தியமைப்பு | ▪ பத்தியமைத்து எழுதுவதில் இடர்ப்பாடு | ▪ பொருத்தமற்ற பத்தியமைப்பு |

# வாய்மொழித் தேர்வு மதிப்பீட்டுத் திட்டம்

**வாய்மொழிப் படைப்பு (20 மதிப்பெண்கள்)**

| நிலை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 |
|---|---|---|---|---|
| மதிப்பெண் பரப்பெல்லை | **9 - 10** | **6 - 8** | **3 - 5** | **1 - 2** |
| கருத்து<br><br>- கருத்துப் பொருத்தம்<br>- கருத்து வளர்ச்சி<br>- கருத்து அமைப்பு<br><br>**(10 மதிப்பெண்கள்)** | ▪ தலைப்புக்கு ஏற்ற முக்கியக் கருத்துகளை விரிவாக எடுத்துரைத்தல்<br><br>▪ கருத்துகளை மிகப் பொருத்தமான சான்றுகளுடன் விவரித்தல்<br><br>▪ கருத்துகள் தொடர்ச்சியாகவும் நிரல்படவும் அமைந்திருத்தல் | ▪ தலைப்புக்கு ஏற்ற சில முக்கியக் கருத்துகளைப் பெரும்பாலும் விளக்கிக் கூறுதல்<br><br>▪ கருத்துகளைப் பெரும்பாலும் சான்றுகளுடன் விவரித்தல்<br><br>▪ கருத்துகள் பெரும்பாலும் நிரல்பட அமைந்திருத்தல் | ▪ தலைப்புக்கு ஏற்ற சில எளிய கருத்துகளை ஓரளவு விளக்கிக் கூறுதல்<br><br>▪ கருத்துகளைச் சில சான்றுகளுடன் விவரித்தல்<br><br>▪ கருத்துகள் ஓரளவு நிரல்பட அமைந்திருத்தல் | ▪ தலைப்புக்கு ஏற்ற கருத்துகளைக் கூற மிகவும் சிரமப்படுதல்<br><br>▪ கருத்துகளைப் பெரும்பாலும் சான்றுகளுடன் விவரிக்க இயலாத நிலை<br><br>▪ கருத்துகள் நிரல்பட அமையாதிருத்தல் |
| மதிப்பெண் பரப்பெல்லை | **9 - 10** | **6 - 8** | **3 - 5** | **1 - 2** |
| மொழிப் பயன்பாடு<br><br>- சரளம்<br>- சொல்வளம்<br>- தெளிவான பேச்சு<br><br>**(10 மதிப்பெண்கள்)** | ▪ கருத்துகளைத் தெளிவாகவும் சரளமாகவும் எடுத்துரைத்தல்<br><br>▪ சிறந்த சொல்வளத்தையும் தொடர்களையும் பயன்படுத்துதல்<br><br>▪ சிறந்த உச்சரிப்பும் பொருத்தமான தொனியும் கொண்ட பேச்சு | ▪ பெரும்பாலும் கருத்துகளைத் தெளிவாகவும் சரளமாகவும் எடுத்துரைத்தல்<br><br>▪ பெரும்பாலும் பொருத்தமான சொல்வளத்தையும் தொடர்களையும் பயன்படுத்துதல்<br><br>▪ பெரும்பாலும் சரியான உச்சரிப்பும் பொருத்தமான தொனியும் கொண்ட பேச்சு | ▪ சற்றுத் தயக்கத்தோடு கருத்துகளை எடுத்துரைத்தல். இருப்பினும், அப்பேச்சு படைப்பைப் புரிந்துகொள்ளத் தடையாக இல்லாதிருத்தல்<br><br>▪ அடிப்படையான சொல்வளத்தையும் சில வேளைகளில் பொருத்தமற்ற சொல்வளத்தையும் எளிய தொடர்களையும் பயன்படுத்துதல்<br><br>▪ சரியான உச்சரிப்புடனும் பொருத்தமான தொனியுடனும் பேசுவதில் சற்றுச் சிரமப்படுதல் | ▪ நிறுத்தி நிறுத்திப் படைத்தல் அல்லது முணுமுணுத்தல்; பேச்சைப் புரிந்துகொள்வதில் சிரமம் ஏற்படுதல்<br><br>▪ மிகக் குறைந்த அளவு சொல்வளத்தையும் பொருத்தமற்ற தொடர்களையும் பயன்படுத்துதல்<br><br>▪ தவறான உச்சரிப்பும் பொருத்தமற்ற தொனியும் கொண்ட பேச்சு |

**வாய்மொழிப் படைப்பையொட்டிய கருத்துரையாடல் (30 மதிப்பெண்கள்)**

| நிலை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 |
|---|---|---|---|---|
| மதிப்பெண் பரப்பெல்லை | **16 - 20** | **11 - 15** | **6 - 10** | **1 - 5** |
| கருத்துரையாடலில் ஈடுபாடு<br>- ஈடுபாடு<br>- கருத்துத் தெளிவு<br>- கருத்துகளை நியாயப்படுத்துதல்<br>**(20 மதிப்பெண்கள்)** | ▪ மிகுந்த ஈடுபாட்டுடன் உரையாடுதல்<br>▪ கருத்துகளை மிகத் தெளிவாக எடுத்துரைத்தல்<br>▪ கருத்துகளைத் தக்க சான்றுகளுடன் தன்னம்பிக்கையோடு நியாயப்படுத்துதல் | ▪ போதுமான ஈடுபாட்டுடன் உரையாடுதல்<br>▪ பெரும்பாலான கருத்துகளைத் தெளிவாக எடுத்துரைத்தல்<br>▪ கருத்துகளைப் போதிய சான்றுகளுடன் பெரும்பாலும் தன்னம்பிக்கையுடன் நியாயப்படுத்துதல் | ▪ ஓரளவு ஈடுபாட்டுடன் உரையாடுதல்<br>▪ சில கருத்துகளைத் தெளிவாக எடுத்துரைத்தல்<br>▪ சில கருத்துகளைப் பொருத்தமற்ற அல்லது தெளிவற்ற சான்றுகளுடன் சற்றுத் தயக்கத்துடன் நியாயப்படுத்துதல் | ▪ ஈடுபாட்டுடன் உரையாட மிகவும் சிரமப்படுதல்; தொடர்ச்சியான தூண்டுதல் தேவைப்படுதல்<br>▪ கருத்துகளை முரண்பாட்டுடன் எடுத்துரைத்தல்<br>▪ கருத்துகளை நியாயப்படுத்தச் சிரமப்படுதல்; கருத்துகளைப் பெரும்பாலும் முரண்பாடான அல்லது தெளிவற்ற சான்றுகளுடன் நியாயப்படுத்துதல் |
| மதிப்பெண் பரப்பெல்லை | **9 - 10** | **6 - 8** | **3 - 5** | **1 - 2** |
| மொழிப் பயன்பாடு<br>- சரளம்<br>- சொல்வளம்<br>- தெளிவான பேச்சு<br>**(10 மதிப்பெண்கள்)** | ▪ கருத்துகளைத் தெளிவாகவும் சரளமாகவும் எடுத்துரைத்தல்<br>▪ சிறந்த சொல்வளத்தையும் தொடர்களையும் பயன்படுத்துதல்<br>▪ சிறந்த உச்சரிப்பும் பொருத்தமான தொனியும் கொண்ட பேச்சு | ▪ பெரும்பாலும் கருத்துகளைத் தெளிவாகவும் சரளமாகவும் எடுத்துரைத்தல்<br>▪ பெரும்பாலும் பொருத்தமான சொல்வளத்தையும் தொடர்களையும் பயன்படுத்துதல்<br>▪ பெரும்பாலும் சரியான உச்சரிப்பும் பொருத்தமான தொனியும் கொண்ட பேச்சு | ▪ சற்றுத் தயக்கத்தோடு கருத்துகளை எடுத்துரைத்தல். இருப்பினும், அப்பேச்சு படைப்பைப் புரிந்துகொள்ளத் தடையாக இல்லாதிருத்தல்<br>▪ அடிப்படையான சொல்வளத்தையும் சில வேளைகளில் பொருத்தமற்ற சொல்வளத்தையும் எளிய தொடர்களையும் பயன்படுத்துதல்<br>▪ சரியான உச்சரிப்புடனும் பொருத்தமான தொனியுடனும் பேசுவதில் சற்றுச் சிரமப்படுதல் | ▪ நிறுத்தி நிறுத்திப் படைத்தல் அல்லது முணுமுணுத்தல்; பேச்சைப் புரிந்துகொள்வதில் சிரமம் ஏற்படுதல்<br>▪ மிகக் குறைந்த அளவு சொல்வளத்தையும் பொருத்தமற்ற தொடர்களையும் பயன்படுத்துதல்<br>▪ தவறான உச்சரிப்பும் பொருத்தமற்ற தொனியும் கொண்ட பேச்சு |